## மன்றப்பொருள்

1. 1999-ஆம் வருடத்திய தொழில்புரிவோர். வணிகர்கள், அழைப்பாளர்கள் மற்றும் தொழில்புரிய அனுமதிக்கப்பட்டவர்கள் ஆகியோரிடமிருந்து தொழில்வரி வசூலித்தல் விதி-16-ன்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பொது வரி திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற அரசாணை (பல்வகை) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 12.01.1999-ன்படியும் கடைசியாக தொழில்வரி திருத்தி செய்யப்பட்ட நாளான 01.10.2013-லிருந்து ஐந்து ஆண்டு கழித்த நிலையில் 01.10.2018-முதல் பொது தொழில்வரி திருத்தம் செய்யப்பட வேண்டும். மேலும். மேற்படி சட்டம், விதி 16-ன்படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-பிரிவு-124**D**-ன்படியும் ஏற்கனவே உள்ள தொழில்வரியுடன் 25-விழுக்காடுகளுக்குக் குறையாமலும், 35-விழுக்காடுகளுக்கு மிகையாகமாலும் திருத்தி அமைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நடப்பில் உள்ள தொழில்வரி விகிதம் பின்வருமாறு.

| வ.எண். | அரையாண்டு வருமானம் | தற்போதுள்ள தொழில்வரி |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | ரூ.21000/-வரை | இல்லை |
| 2 | ரூ.21,001/- முதல் 30,000/- வரை | ரூ.120/- |
| 3 | ரூ.30,001/- முதல் 45,000/- வரை | ரூ.300/- |
| 4 | ரூ.45,001/- முதல் 60,000/- வரை | ரூ.590/- |
| 5 | ரூ.60,001/- முதல் 75,000/- வரை | ரூ.890/- |
| 6 | ரூ.75,001/- மற்றும் அதற்கு மேல் | ரூ.1175/- |

மேற்கண்ட கலம் 3-ல் கண்டுள்ள தற்போது நடப்பில் உள்ள தொழில்வரியின் மீது 25%-க்கு குறையாமலும், 35%-க்கு மிகாமலும் வரி உயர்வு செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1.அரசாணை மற்றும் தொழில்வரிச் சட்டம் 1999-விதி 16-ன்படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-பிரிவு-124**D**-ன்படியும் ஏற்கனவே உள்ள தொழில்வரியுடன் 25%-க்கு குறையாமலும், 35%-க்கு மிகாமலும் வரி திருத்தம் செய்யலாம்.

2. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் லாரி எண் T.N.23AY 7011 வாகனத்திற்கு பழுத பணிகள் செய்ய வேண்டி 10.02.2017-ந் தேதியில் மூடி முத்திரையிட்ட விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளவாறு

| வ.எண் | விலாசம் | வாகனம் எண் | டெபாசிட் தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | யோஹா மோட்டார்ஸ், சேலம் | T.N.23AY 7011 | Exempted | 390300 |
| 2 | ஜேவிகே ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் சேலம் | T.N.23AY 7011 | Exempted | 352000 |
| 3 | பநீ ஜோதிமுருகன் மோட்டார் ஒர்க்ஸ்,சேலம் | T.N.23AY 7011 | Exempted | 368800 |

மேற்காணும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் 2-ல் காணும் ஜேவிகே ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சேலம் அவர்களின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அ. கு : 1) அனுமதிக்கலாம்.

2) மன்றத்தின் முன் அனுமதி எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியதை நிர்வாக அனுமதிவழங்க மன்றம் அனுமதிக்கலாம்

3) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்-2 ல் உள்ள விலைப்புள்ளி மற்றவை இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்காட்டிலும் குறைவாக உள்ளதால் வ.எண். 2-ல் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

4) பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

3. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நகராட்சிக்கு சொந்தமான வளையாம்பாட்டு உரக்கிடங்கில் குப்பைகள் சேமிக்கப்பட்டுள்ளது. மேலும் நகர குப்பைகளை உரக்கிடங்கில் சேமிக்க வாகனங்கள் உள்ள செல்ல வழித்தடம் இல்லை எனவே, குப்பைகளை அகற்றி வழித்தடம் செய்யும் பணிக்கு 10.04.2018 இன்று வரபெற்ற விலைப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விவரம் | வாடகை விவரம் | கலெக்டீய் ஆர்கனேசர் ரூரல் எஜிகேஷ்னல் டிரஸ்ட | பநீ சீனிவாச எண்டர்பிரைஸ் ரூ |
|---|---|---|---|---|
| 1 | ஜே.சி.பி.இயந்திரம் | ஒரு மணி நேரம் | ரூ.850/- | ரூ.875/- |
| 2 | ஹிட்டாச்சி இயந்திரம் | ஒரு மணி நேரம் | ரூ.1950/- | ரூ.2100/- |
| 3 | 6 யூனிட் டிப்பர் லாரி | ஒரு நாள் வாடகை | ரூ.9000/- | ரூ.10000/- |
| 4 | 4 யூனிட் டிப்பர் லாரி | ஒரு நாள் வாடகை | ரூ.7000/- | ரூ.7500/- |
| | | **மொத்தம்** | **ரூ.18800/-** | **ரூ.20475/-** |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி 10.04.2018 இன்று பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கலெக்டீய் ஆர்கனேசர் ரூரல் எஜிகேஷ்னல் டிரஸ்ட் ஜோலார்பேட்டை நிறுவனத்தினர் கொடுத்துள்ளதை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

4. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட டவுன் பிரிவு மின்பகிர்மான கழகத்திற்குட்பட்ட பிரிவின் சென்னாம்பேட்டை பகுதிகளில் மொத்தம் 28 எண்ணிக்கை கொண்ட புதிய குழல் விளக்குகள் அமைத்து தர வேண்டி ஆணையாளர், வாணியம்பாடி நகராட்சி கடிதம் ந.க.எண். 541/2018/இ2 நாள் :07.03.2018 கேட்டுக்கொண்டதற்கு, அதற்குண்டான மதிப்பீடு ரூ.98,180/-யை செலுத்துமாறு உதவி பொறியாளர் டவுன் பிரிவு வாணியம்பாடி அவர்களின் கடிதம் எண்.உ.பொ/டவுன்/வாணி/ ந.க.எண்.78/18 நாள் : 11.05.2018-ந் தேதிய பெறப்பட்ட கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளது.

எனவே மேற்படி தொகை ரூ.98,180/-யை தமிழ்நாடு மின்சார வாரியம் டவுன் பிரிவிற்கு செலுத்த மன்றம் அனுமதி வைக்கப்படுகிறது.

அ.கு : 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3 பணியின் அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொகையை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 541/2018/இ2

5. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட தெற்கு பிரிவு மின்பகிர்மான கழகத்திற்குட்பட்ட பிரிவில் சக்திநகர் ஏரிகரையூர், அண்ணா நகர், டி.வி.ஜி.நகர் பகுதிகளில் 30 எண்ணிக்கை கொண்ட புதிய குழல் விளக்குகள் அமைத்து தர வேண்டி ஆணையாளர், வாணியம்பாடி நகராட்சி கடிதம் ந.க.எண்.540/2018/இ2 நாள்:20.04.2018 கேட்டுக்கொண்டதற்கு, அதற்குண்டான மதிப்பீடு ரூ.1,11,490/-யை செலுத்துமாறு உதவி பொறியாளர் தெற்குபிரிவு மின் பகிர்மான கழகம் அவர்களின் கடிதம் எண்.உ.பொ/தெற்கு/ வாணி/ க.எண்.89/18 நாள் : 19.05.2018-ந் தேதிய கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தொகை ரூ.1,11,490/-யை தமிழ்நாடு மின்சார வாரியம் தெற்கு பிரிவிற்கு செலுத்த மன்றம் அனுமதி வைக்கப்படுகிறது.

அ.கு : 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி தொகை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3 பணியின் அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொகையை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 540/2018/இ2

6. நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை ந.க.எண்.7234/2014/ஆர்1 நாள் :15.03.2018-ல் தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு எண்.33 நாள் : 25.02.2018-ன்படி நகராட்சி

எல்லைக்குள் இயங்கம் அரசு கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் (சுயநிதி பாட பிரிவுகளுக்கான கட்டிடங்களை தவிர்த்து) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள் நூலகளுங்கள் தவிர்த்து அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டு உள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்வது தொடர்பான அறிவிப்பு தினகரன் நாளிதழில் 21.04.2018-ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டதற்கு KAL Publications (P) Ltd பில் நெம்பர் 3300070967 நாள் : 21.04.2018-ல் ரூ.19488/- செலுத்தும்படி கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ.19,488/-னை மேற்கண்ட நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : 1 மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 625/2018/அ1

7. இயக்குநர், தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம், 203, அழகேசன் ரோடு சாய்பாபா காலனி, கோயம்பத்தூர் அவர்களின் ந.க.எண்.0431/2018/அ3, நாள். 29.05.2018 ல் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வரும் திரு.எஸ்.சிவக்குமார் மற்றும் திரு.வி.சரவணன் ஆகியோர் மேற்படி பயிற்சி நிறுவனத்தில் விரிவாக்கப் பயிற்சி (Comprehensive Training Course) Batch - I 04.06.2018 முதல் 29.06.2018 வரை நடைபெறவுள்ளதாகவும் மேற்படி பயிற்சியில் கலந்து கொள்ள தங்கும் வசதி மற்றும் உணவு வசதிக்கான கட்டணம் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 20 நாட்களுக்கு ஆகும் தொகை ரூ.20,000/- என இரண்டு பணியாளர்களுக்கு ரூ.40,000/- க்கான வங்கிவரைவோலையாக வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கட்டண தொகை ரூ.40,000/- க்கு "The Director, TamilNadu Institute of Urban Studies, Coimbatore" என்கிற முகவரிக்கு வங்கி வரைவோலை தயார் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு
1. மேற்படி தொகையை வழங்க அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி தொகை பொதுநிதி 2018-19-ம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2903/2012/சி1.

8. இந்நகராட்சியில் மேலாளராக பணிபுரிந்து தருமபுரி நகராட்சிக்கு கணக்காளராக மாறுதல் செய்யப்பட்டு பணிபுரிந்து தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள திரு.கோ.வெ.சுரேஷ், என்பவர் கூடுதல் பொது வழக்கறிஞர், சென்னை அவர்களின் 24.11.2017 ந் தேதிய கருத்துருவில் சம்மந்தப்பட்ட நபர் மீது மாவட்ட குற்றவியல் பிரிவில் துறை ரீதியாக விசாரணை உள்ளதாலும் அன்னாரை மீண்டும் ' (Non-sensitive) பணியில் சேர அனுமதி வழங்க இயலாது என கருத்துரு வழங்கப்பட்டதை அடுத்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் சார்பாக டெல்லி சுப்ரீம் நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு (SLP) மேல் முறையீடு செய்ய திரு.எஸ்.நந்தகுமார், மூத்த வழக்கறிஞர், சுப்ரீம் கோர்டு அவர்களிடம் உரிய விவரங்களை மேட்டூர் நகராட்சி ஆணையாளர் திரு.பா.நாராயணன், அவர்கள் மூலம் உரிய மேல்முறையீடு செய்வதற்குண்டான அனைத்து ஆவணங்களை வழங்கி மேல்முறையீடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதின்பேரில் வழக்கு எண். 28929/16, 2232/16 மற்றும் மேல்முறையீடு எண்.1193/17 ஆகிய வழக்குகளுக்கான type set அனைத்தையும் நகல் எடுத்து திரு.எஸ்.நந்தகுமார், வழக்கறிஞர், டெல்லி அவர்களுக்கு அப்போதைய ஆணையாளர், மேட்டூர் நகராட்சி அவர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு மேலும், W.A.எண்.1193/17 வழக்கு சம்மந்தமாக உச்சநீதி மன்றத்தில் (SLP) செய்ய உறுதி ஆவணத்தில் Notary கையொப்பமுடன் மேட்டூர் நகராட்சி ஆணையர் அவர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. திரு.எஸ்.நந்தகுமார், வழக்கறிஞர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு மேற்படி W.A.No.1193/17 சம்மந்தமாக ஆகும் வழக்கு கட்டணம் ரூ.70,000/- ல் 2% வருமான வரி உரிய கணக்கில் செலுத்தி மீதமுள்ள தொகையை திரு.எஸ்.நந்தகுமார், வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு : 1. மேற்படி தொகையை வழங்க அனுமதிக்கலாம்.

2. மேற்படி தொகை பொதுநிதி 2018-19-ம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0147/2016/சி1.

9. இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் கீழ்கண்ட துப்புரவு பணியாளர்கள் வருகின்ற 30.06.2018-ல் ஓய்வுபெறயுள்ளார்கள். அவர்களுடைய ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு வந்த சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை மற்றும் அதற்கான வட்டித்தொகை அரசால் வழங்கும் நிர்வாக பங்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் கோட்டம் | சந்தா தொகை 148x20 | 30.06.2018 முடிய வட்டி தொகை | அரசால் வழங்கும் பங்கு தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | P.சரோஜா/பரசுராமன் 3-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | R.மணியம்மாள்/சூசை<br>4-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |
| 3 | K.வெங்கடேசன்/காளியப்பன்<br>4-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |
| 4 | S.சுசிலா/சாமிநாதன்<br>1-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |
| 5 | விஜியா/ரத்தினம்<br>1-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |
| 6 | லூர்துமேரி/ராயப்பன்<br>2-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |
| 7 | கலைச்செல்வி/பெருமாள்<br>2-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |
| 8 | சந்தோஷம்/கொண்டையா<br>4-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |
| 9 | இந்திராணி/நாகப்பன்<br>4-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |
| 10 | குப்பம்மாள்/வஜ்ஜிரவேலு<br>3-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |
| 11 | மல்லிக/ஏழுமலை<br>2-வது கோட்டம் | 2960 | 30037 | 10000 | 42997 |

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 980/2018/அ3

10. இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு உட்பட்ட அனைத்து வாகனங்களுக்கு காப்பீடு கட்டணங்கள், தகுதிச்சான்று, வாகன பராமரிப்பு புதிய வாகனம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு கட்டணம் செலுத்தி பதிவு செய்தல், வாகனத்திற்கு டயர் டியூப் பேட்டரிகள் மற்றும் இதர செலவினங்கள் பொறியாளர் பிரிவு வாகனங்கள் பழுது பார்ப்பு செலவினங்கள் மேற்கொள்ள ஒரு வருடத்திற்கு தேவையான செலவினத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதி 2018-19 ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய நிர்வாக அனுமதி கோரி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. பொது நிதி 2018-19 ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1097/2018/இ1

11. அனுமதியற்ற மனைப்பிரிவுகள்/ மனைகள் வரன்முறைப்படுத்தும் விதிகள் 2017-ன்படி வாணியம்பாடி நகராட்சி பகுதிகுள் 20.11.2016-ம் தேதிக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவின் மனைகளை வரன்முறைப்படுத்தி அனுமதி பெற்றுக்கொள்ளலாம். மேற்படி

விதிகளின்படி பொதுமக்கள் பயன்பெற ஏதுவாக இத்திட்டம் 03.11.2018 வரை கால அவகாசம் நீட்டித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தினை துரிதமாக செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.60978/2017/டிபி3, நாள்:07.06.2018-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை பொதுமக்கள் அறிந்துகொள்ள ஏதுவாக மக்கள் பெரும்பாலும் கூடும் இடங்களில் விளம்பர பலகைகள் வைத்தல், கைப்பிரதிகள் அச்சிட்டு வினியோகித்தல், திரையரங்குகளில் ஸ்லைடு போடுதல், ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் ஆகிய முறைகளில் பொதுமக்களுக்கு விளம்பர செய்திடுதிடுமாறும், மேலும் சிறப்பு முகாம்கள் மற்றும் கூட்டங்கள் நடத்தவும் மேற்படி கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்படி இப்பணிகள் செய்ய தேவைப்படும் தோராய செலவீனம் ரூ.75,000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காகவும் மேற்குறிப்பிட்ட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :

அனுமதியற்ற மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்தும் அரசின் கொள்கை அடிப்படையிலான திட்டத்தின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**( ந.க.எண்.718/2018/எப்1)**

1. வாணியம்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 1,06,867 மக்கள் தொகையால் இந்நகரில் தினமும் சுமார் 37 மெட்ரிக் டன் அளவிற்கு திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகள் தற்பொழுது வளையாம்பட்டு உரக்கிடங்கில் ( சுமார் 3.50 ஏக்கர்) பரப்பளவில் கொட்டப்பட்டுவருகிறது. தற்பொழுது நகராட்சியில் உள்ள 65 தள்ளுவண்டிகள், 5 LCV ஆட்டோ வண்டிகள் மூலம் சுமார் 65% விழுக்காடு வீடுகளில் திடக்கழிவுகள் மக்கும் மக்காத குப்பைகள் எனப்பிரித்து வாங்கப்படுகிறது. நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய சுமார் 5.5 மெட்ரிக் டன் (15விழுக்காடு) திடக்கழிவுகளான பிளாஸ்டிக், ரப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள், துணிகள், தேங்காய் ஓடுகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றினை கையாளுவதிலும் மேலும் அப்புறப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இவற்றினை பாதுகாப்பாக கையாண்டு வெளியேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 11.05.2018 அன்று நடைபெற்ற ஆய்வுகூட்டத்தில் ஆலோசித்தபோது மேற்கண்ட எரியக்கூடிய தன்மை வாய்ந்த திடக்கழிவுகளை கடலூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் எரிபொருளாக பயன்படுத்துவதற்காக வழங்குவதால் அந்நிறுவனத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம் எனத்தெரிவித்ததை தொடர்ந்து மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பேசியபோது நாளொன்றுக்கு 250 மெட்ரிக் டன் எரியக்கூடிய திடக்கழிவுகளை கையாளக்கூடிய அளவில் தங்களிடம் திறன் இருப்பதாகவும் இதுசம்பந்தமாக அந்நிறுவனத்துடன் 10 ஆண்டுகாலத்திற்கு எரியக்கூடிய திடக்கழிவுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டால் திடக்கழிவுகளை நகராட்சியின் செலவில் நகராட்சி வாகனங்களில் ஏற்றி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் வந்து தர வேண்டும் எனவும் மேற்கண்ட எரியக்கூடிய திடக்கழிவுகளை நகராட்சி இலவசமாக தரவேண்டும் எனவும் நிபந்தனை தெரிவித்தனர். இதுசம்பந்தமான மாதிரி புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையும் கொடுத்துள்ளனர்.

வாணியம்பாடி நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய 5.5 மெ.டன் திடக்கழிவுளை கையாளுவதும் அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் பல்வேறு சிரமங்கள் உள்ளன. எனவே அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றிட மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிறுவனத்துடன் 10 ஆண்டுகொலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளவும் அதற்காக விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி சொந்த பொறுப்பில் இந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. வாணியம்பாடி நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் எரியக்கூடிய தன்மையுள்ள திடக்கழிவுகளை கையாளுவதிலும் மற்றும் பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி வாகனத்தில் கொண்டு சென்று வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

2. பத்தாண்டு காலத்திற்கு அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு திடக்கழிவுகளை வழங்குவதற்கு அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1276 / 2018 /எச்1**

2. மாவட்ட ஆட்சித்தலைவர் வேலூர் அவர்களின் 21.05.2018-ந் தேதிய ஆய்வு கூட்டத்தில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டதில் டெங்கு மற்றும் உயிர்கொல்லி நோய் சிக்கன்குனியா, மலேரியா மற்றும் காலாரா நோய்கள் பரவும் அபாயம் ஏற்படுவதை தவிர்க்க போதுமான புகை மருந்து அடிக்கும் இயந்திரம் வைத்திருக்க வேண்டும் என அறிவுரை வழங்கியுள்ளார்கள். மேலும், தேவையான நோய் தடுப்பு மருந்துகள் வாங்கி வைத்திடவும் அறிவுரை வழங்கினார்கள். இந்நகராட்சி 36 வார்டுகள் அமைந்துள்ளது. 94,576 மக்கள் தொகை உள்ளதால் மக்கள் தொகைக்கு ஏற்ப்ப இந்நகராட்சிக்கு துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின் படி வாகனத்தில் பொருத்தும் வகையில் புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (Vehicle Mounted Thermo Fogging Machine) கூடுதலாக ஒன்று மற்றும் கையில் எடுத்துசெல்லும் வகையில் சிறிய இயந்திரம் இரண்டும் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.7.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- பொது சுகாதாரத்தை கருத்தல் கொண்டு பொதுமக்களின் நலனைக் கருதி கூடுதலாக புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (Vehicle Mounted Thermo Fogging Machine) வாங்கவும் அதற்கான செலவினதிற்கும் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர் நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:988/2018/எச்1

3. வாணியம்பாடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு வாகனத்தில் பொருத்தம் வகையில் புகை மருந்து அடிக்கும் இயந்திரம் (Vehicle Mounted Thermo Fogging Machine) ஒன்று கூடுதலாக வாங்கவும் கையில் எடுத்து செல்லும் வகையில் சிறிய இயந்திரம் இரண்டு வாங்கி கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 14.06.2018 –ம் தேதி அன்று வரப்பெற்ற கீழ் கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தின் பெயர் | பெரிய இயந்திரம் தொகை ரூ. | சிரிய இயந்திரம் தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளி மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | சிஸ்டம் இன்ஜினியரிங், சென்னை | 593600/- | 42000/- | 635600/- |
| 2 | எஸ்.என். எண்டர்பிரைசஸ், சென்னை | 595000/- | 43000/- | 638000/- |

அலுவலக குறிப்பு:- மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வரிசை எண் 1-ல் கொடுத்துள்ள நிறுவனம் சிஸ்டம் இன்ஜினியரிங், சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.988/2018/எச்1

4. இந்நகராட்சியில் வருகின்ற 26.01.02018-ந் தேதியன்று நடைபெறவுள்ள குடியரசு தினவிழாவையொட்டி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் மூலம் தேசியகொடி ஏற்றி வைக்கப்பட உள்ளதால், இவ்விழாவிற்கு தேவையான குடியரசு தினவிழா அழைப்பிதழ் அனைவருக்கும் அனுப்ப வேண்டியுள்ளதால் 100 பிரதிகள் தயார் செய்ய கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் வரபெற்றுள்ளது.

1.எஸ்.எஸ். பிரிண்டர்ஸ், வாணியம்பாடி – ரூ.3,000/-
2.சி.எம்.ஒய் பிரிண்டர்ஸ், வாணியம்பாடி - ரூ.2,900/-
3.வி.எம்.ஜெ.பிரிண்டர்ஸ், வாணியம்பாடி - ரூ.2,500/-

மேற்படி வரபெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.2,500/- (வண்ண கலரில்) குறைவான விலைபுள்ளி கொடுத்த வி.எம்.ஜெ பிரிண்டர்ஸ், வாணியம்பாடி அவர்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு : | 1. | அனுமதிக்கலாம். |
| | 2 | மேற்படி தொகையை நகராட்சி பொது நிதியில் செலுத்த மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3 | அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண்.155/2013/சி1.

5.இந்நகராட்சியில் பொதுபிரிவு மற்றும் பொதுசுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வந்த திரு.கோ.வெங்கடாஜலபதி வருவாய் ஆய்வர் (31.05.2018-ல் ஓய்வு) திரு.S.காசிநாதன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் (31.05.2018-ல் ஓய்வு) மற்றும் திரு.R.வெங்கடேசன், துப்புரவு பணியாளர்

(31.05.2018-ல் ஓய்வு) மேற்படி பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை கீழ்கண்ட பட்டியில்படி சந்தா தொகை, அதற்கான வட்டி தொகை மற்றும் நிர்வாக பங்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | திருவாளர்கள் | சந்தா தொகை ரூ | வட்டிதொகை ரூ | நிர்வாக பங்கு தொகை ரூ | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | கோ.வெங்கடாஜலபதி வருவாய் ஆய்வர் | 2960 | 29822 | 10000 | 42782 |
| 2 | திரு.S.காசிநாதன், துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 2960 | 29822 | 10000 | 42782 |
| 3 | திரு.R.வெங்கடேசன், துப்புரவு பணியாளர் | 2960 | 29822 | 10000 | 42782 |

அ.கு : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.940/2018/அ3

6. வாணியம்பாடி நகராட்சியின் வார்டு எண்.22 வாரசந்தை பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தின் பின்புறம் நீண்ட நாட்களாக மரம் காய்ந்த போய் கீழே விழும் நிலையில் உள்ளது. மேற்படி பட்டு போன மரத்தை அப்புறபடுத்த பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு 1. பொது ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி பொது மக்களின் நலன் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி மேற்படி மரத்தை அப்புறபடுத்த பொது ஏலம் விட அனுமதி வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.1184/2018/இ1.

7. வாணியம்பாடி நகராட்சி குடிநீர் நிதி 2018-19 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 26.04.2018-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கொடையாஞ்சி மற்றும் வடக்குப்பட்டு நீரேற்று நிலையத்தில் ஊற்று கிணறு மற்றும் ஆழ்துறை கிணறு மோட்டார்கள் மற்றும் பைப்புகள் பழுது நீக்குதல் மற்றும் மின்சார | 5.00 | 1.எஸ்.சுந்தரேசன்<br>2.எஸ்.தாமோதிரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு<br>மதிப்பீட்டு தொகையை விட 0.50% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கேபில்கள் மாற்றி அமைத்தல் பணி | | | |

அ.கு 1 குடிநீர் நிதி 2018-19-ம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2 பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி (ம) ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3 மேற்காணும் பணிக்கு 26.04.2018-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.S.சுந்தரேசன் ஒப்பந்தபுள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க எண் :801/2018/இ2)

8. வாணியம்பாடி நகராட்சி குடிநீர் நிதி 2018-19 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 26.04.2018-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 பஷிராபாத், காஜாநகர் வார்டு எண்.3 பெரியபேட்டை வார்டு எண்.34 புதிய இரயில்வே பாலம் அருகில் HDPE பைப்லைன் புதியதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணி | 8.00 | 1.எஸ்.சுந்தரேசன்<br>2.எஸ்.தாமோதிரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% குறைவு<br>மதிப்பீட்டு தொகையை விட 0.20% அதிகம் |

அ.கு 1 குடிநீர் நிதி 2018-19-ம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2 பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி (ம) ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3 மேற்காணும் பணிக்கு 26.04.2018-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்

திரு.S.சுந்தரேசன் ஒப்பந்தபுள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க எண் :800/2018/இ2)

9. வாணியம்பாடி நகராட்சி குடிநீர் நிதி 2018-19 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 26.04.2018-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | புதியதாக HDPE தொட்டிகள் கிசோக் பாக்ஸ் வாங்கி பயன்படுத்துதல் குடிநீர் தொட்டி வைத்து மேடை கட்டுதல் பழுதான ஆழ்துளை மின்மோட்டார் ஆர்மெச்சுர் பழுது நீக்குதல் | 5.00 | 1.எஸ்.சுந்தரேசன்<br>2.எஸ்.தாமோதிரன் | மதிப்பீட்டு தொகையை விட 0.10% குறைவு<br>மதிப்பீட்டு தொகையை விட 0.20% அதிகம் |

அ.கு 1 குடிநீர் நிதி 2018-19-ம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2 பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி (ம) ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3 மேற்காணும் பணிக்கு 26.04.2018-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.S.சுந்தரேசன் ஒப்பந்தபுள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க எண் :802/2018/இ2)